பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

06 11 2024 — 7 15
புதன்கிழமை — காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. சமத்துவம் மற்றும் சமநீதி, நீதித்துறையின் கொள்கைகளுக்கான வழிமுறையாக இருக்க வேண்டுமென்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்
2. சடட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள ஜார்க்கண்ட் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.
3. அமெரிக்காவில் அதிபர் தேர்தலுக்கான வாக்குப்பதிவு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.
4. மரத்தினால் உருவாக்கப்பட்ட உலகின் முதலாவது செயற்கைக்கோளை ஜப்பான் விண்வெளியில் வெற்றிகரமாக செலுத்தியுள்ளது.
5. 2036-ஆம் ஆண்டு ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் போட்டிகளை இந்தியாவில் நடத்த விருப்பம் தெரிவித்து சர்வதேச ஒலிம்பிக் சங்கத்திற்கு இந்திய ஒலிம்பிக் சங்கம் முறைப்படி கடிதம் அளித்துள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

சமத்துவம் மற்றும் சமநீதி நீதித்துறையின் கொள்கைகளுக்கான வழிமுறையாக இருக்க வேண்டுமென்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உச்சநீதிமன்றத்தின் சார்பில் மூன்று புத்தகங்களை வெளியிட்டு அவர் பேசினார்.

நீதி வழங்கும் பரிபாலன முறை நேர்மையான சமூகத்தை நோக்கிய நாட்டின் பயணத்தை வலுப்படுத்துவதாக அமையும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியாவின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை பாதுகாக்கும் வகையில் உச்சநீதிமன்றம் வலுவடைந்திருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

நீதி வழங்கும் முறையில் அடிமட்ட அளவிலான பிரச்சினைகளை எதிர்கொள்வதில் மாவட்ட நீதித்துறை அதிகாரிகள் மற்றும் மக்கள் நீதிமன்றங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு டி ஒய் சந்திரசூட் உள்ளிட்ட நீதிபதிகள் கலந்து கொண்டனர்.

**[]<<<>>>[]**

குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் ஒருநாள் பயணமாக இன்று சத்திஷ்கர் செல்கிறார்.

ராய்ப்பூரில் நடைபெறும் சத்திஷ்கர் மாநில திருவிழாவின் நிறைவு நிகழ்ச்சியில் அவர் பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

**[]<<<>>>[]**

பிரபல நாட்டுப்புற பாடகி சாரதா சின்ஹா புதுதில்லியில் நேற்று காலமானார். அவருக்கு வயது 72.

உடல்நலக் குறைவு காரணமாக தில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக குடும்பத்தினர் தெரிவித்தனர்.

பீகார் மாநிலத்தைச் சேர்ந்த பாடகி சாராதா, மைதிலி, போஜ்புரி, மகாகி மொழிகளில் நாட்டுப்புற பாடல்களை பாடி புகழ்பெற்றவர்.

அவரது சாதனைகளை பாராட்டி மத்திய அரசு பத்மஸ்ரீ, பத்மபூசன் மற்றும் சங்கீத நாடக அகாடமி விருதுகளை வழங்கி கௌரவித்துள்ளது.

சாரதா சின்ஹா மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், சாரதா சின்ஹாவின் நாட்டுப்புறப் பாடல்கள் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்றும், இசை உலகிற்கு அவரது மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பு என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பாரதி சின்ஹாவின் மறைவுக்கு உள்துறை அமைச்சர் திரு அமித்ஷாவும் இரங்கல் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

ஓய்வூதியதாரர்கள் டிஜிட்டல் முறையில் வாழ்நாள் சான்றிதழை வழங்கும் மூன்றாம் கட்ட திட்டத்தை மத்திய இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

மத்திய ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நலத்துறை சார்பில் நாடு முழுவதும் 800 நகரங்கள் மற்றும் மாவட்டங்களில் இந்த இயக்கம் தொடங்கப்பட உள்ளது.

வரும் 30-ஆம் தேதி வரை இந்த டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ் வழங்கும் இயக்கம் நடைபெறும் என்றும், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள ஜார்க்கண்ட் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் மொத்தம் உள்ள 81 தொகுதிகளுக்குக இரண்டு கட்டங்களாக வரும் 13 மற்றும் 20-ஆம் தேதிகளில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

ராஞ்சி மற்றும் லோகர்தாகா மாவட்டங்களில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டங்களில் பேசிய பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ராஜ்நாத்சிங், ஜார்க்கண்ட் மாநிலத்தின் வளர்ச்சிக்கு திரு ஹேமந்த் சோரன் தலைமையிலான அரசு முட்டுக்கட்டை போடுவதாக குறை கூறினார்.

இதனிடையே ஜார்க்கண்ட் மாநில காங்கிரஸ் தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே நேற்று வெளியிட்டார்.

கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சமூக நீதிக்கான உத்தரவாதம் உள்ளிட்ட ஏழு உத்தரவாதங்கள் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில் வரும் 20-ஆம் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதவு நடைபெறவுள்ள மகாராஷ்டிரா மாநிலத்திலும் அரசியல் கடசிகளின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

இம்மாநிலத்தின் புதிய காவல்துறை தலைமை இயக்குநராக திரு சஞ்ஜய் குமார் வர்மாவை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

ஏற்கனவே இந்த பதவியில் இருந்த திரு ராஸ்மி சுக்லா மீதான புகார்களைத் தொடர்ந்து இரு தினங்களுக்கு முன் அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

[]<<<>>>[]

இளைஞர்கள் வேலை தேடுபவர்களாக மட்டுமல்லாமல் வேலை வழங்குபவர்களாகவும் இருக்க வேண்டுமென்று தமிழக தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு பி டி ஆர் பழனிவேல் தியாகராஜன் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் நேற்று வர்த்தக கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், கல்வி பயிலும்போதே இளைஞர்கள் திறமைகயை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் இளம் சாதனையாளர்களுக்கு விருதுகளையும் திரு பழனிவேல் தியாகராஜன் வழங்கினார்.

[]<<<>>>[]

அமெரிக்காவில் புதிய அதிபரை தேர்வு செய்வதற்கான வாக்குப்பதிவு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அனைத்து மாகாணங்களிலும் மக்கள் ஆர்வத்துடன் வாக்களித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் திருமதி கமலா ஹாரீஸ், குடியரசுக் கட்சியின் திரு டொனால்டு ட்டிரம்ப் இடையே கடும் போட்டி நிலவுகிறது.

வாக்குப்பதிவு முடிந்தவுட்ன வாக்கு எண்ணிக்கை தொடர்ந்து நடைபெறும்.

[]<<<>>>[]

மரத்தினால் உருவாக்கப்பட்ட உலகின் முதலாவது செயற்கைக்கோளை ஜப்பான் விண்வெளியில் வெற்றிகரமாக செலுத்தியுள்ளது.

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் **Lignosat** என்ற பெயரிலான இந்த செயற்கைக்கோள் பூமியின் சுற்றுவட்டப்பாதையில் ஆறு மாத காலத்திற்கு செயல்பாட்டில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் கியோட்டோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களால் வடிவமைக்கப்பட்ட இந்த செயற்கைக்கோள் பாரம்பரிய முறையில் வடிவமைக்கப்பட்டிருப்பதாகவும், பத்து மாத கால சோதனைக்குப் பின்னர் தற்போது விண்ணில் செலுத்தப்பட்டிருப்பதாகவும் ஜப்பான் விண்வெளித்துறை தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

காச நோயை முற்றிலுமாக ஒழிக்கும் இந்தியாவின் பிரச்சார பயணத்துக்கு உலக அளவில் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அதன்படி கடந்த 2015-ஆம் ஆண்டு முதல் 2023-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் காசநோய் பாதிப்பு 17 புள்ளி ஏழு சதவீதம் குறைந்திருப்பதாக உலக சுகாதார அமைப்பின் அறிக்கை தெரிவிக்கிறது.

அடுத்த ஆண்டுக்குள் இந்தியாவிலிருந்து முற்றிலுமாக காசநோயை ஒழிக்க இந்தியா உறுதிபூண்டுள்ளது.

தற்போது இந்தியாவை பின்பற்றி உலக நாடுகளிலும் காசநோய் ஒழிப்பு இயக்கம் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

பயங்கரவாதம் மற்றும் பிரிவினைவாதத்தால் ஏற்படும் சவால்களையும், அச்சுறுத்தல்களையும் இணைந்து முறியடிக்க இந்தியாவும், நைஜீரியாவும் உறுதிபூண்டுள்ளன.

புதுதில்லியில் நேற்று நிறைவடைந்த இந்த நாடுகளுக்கு இடையேயான தீவிரவாத எதிர்ப்பு பேச்சுவார்த்தையில் இதற்கான உறுதி மேற்கொள்ளப்பட்டது.

இந்தியா சார்பில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவலும், நைஜீரியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு **Nuhu ribadu**-வும் இதில் பங்கேற்றனர்.

அப்போது தீவிரவாத செயல்களை இணைந்து முறியடிப்பதற்கான வழிமுறைகள் இறுதி செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தீவிரவாதத்தை எந்த ஒரு வடிவிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதில் இரு நாடுகளும் உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

**[]<<<>>>[]**

இந்தியா - ஜாம்பியா இடையே பல்வேறு துறைகளில் உறவுகளை வலுப்படுத்த முடிவு செய்திருப்பதாக வெளியுறவுத்துறை இணை அமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக அந்நாட்டுக்கு சென்றுள்ள அமைச்சர், ஜாம்பியா வெளியுறவு அமைச்சர் திரு **Mulambo haimbe** -வுடன் நடத்திய பேச்சுக்களின்போது இதற்காக முடிவு எடுக்கப்பட்டதாக சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

தமது இந்த பயணத்தின்போது இந்தியா - ஜாம்பியா கூட்டு நிரந்தர ஆணையத்தின் ஆறாவது கூட்டத்திற்கு அந்நாட்டு அமைச்சருடன் திரு கீர்த்தி வர்தன் சிங் தலைமை வகிக்க உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அந்நாட்டு வர்த்தகத் துறையினர் மற்றும் உயரதிகாரிகளுடன் அவர் பேச்சுக்கள் நடத்த உள்ளதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

வரும் 2036-ஆம் ஆண்டு ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் போட்டிகளை இந்தியாவில் நடத்துவதற்கு விருப்பம் தெரிவித்து சர்வதேச ஒலிம்பிக் சங்கத்திற்கு இந்திய ஒலிம்பிக் சங்கம் முறைப்படி கடிதம் அளித்துள்ளது.

கடந்த மாதம் இதற்கான கடிதம் சமர்ப்பிக்கப்பட்டதாக ஒலிம்பிக் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

2036-ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நடத்த மத்திய அரசு விரும்புவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

கடந்த ஆண்டு மும்பையில் நடைபெற்ற இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் 141-வது கூட்டத்திலும் இந்த கோரிக்கை வலியுறுத்தப்பட்டது.

**[]<<<>>>[]**

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐ பி எல் கிரிக்கெட் போட்டிகளுக்கான வீரர்களின் ஏலம் இம்மாதம் 24 மற்றும் 25-ஆம் தேதிகளில் சௌதி அரேபியாவின் ஜெட்டா நகரில் நடைபெறவுள்ளது.

சென்ற ஆண்டு ஐ பி எல் போட்டிகளை துபாயில் நடைபெற்றதைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக வெளிநாட்டில் இதற்கான ஏலம் நடைபெறுவதாக பி சி சி ஐ தெரிவித்துள்ளது.

இதில் ஆயிரத்து 165 இந்திய வீரர்களும், 409 வெளிநாட்டு வீரர்களும் பல்வேறு அணிகள் மூலம் ஏலத்தில் எடுக்கப்பட உள்ளதாகவும் பி சி சி ஐ தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

சென்னையில் நேற்று தொடங்கிய சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் மாஸ்டர்ஸ் பிரிவில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி, சக வீரரான விதித் குஜராத்தியை வென்றார்.

***<u>End of News</u>***